விலைரூபா 1-00 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 பங்குனி 29 ஐ. ஆகிர் 16 இதழ் 58
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 11—4—82

# போக்லண்ட் கடற்பகுதியில் வெடிகுண்டு கண்ணிகள்!

வாஷிங்டன், ஏப், 10 போக்லண்ட் தீவுகள் பிரச்னையால் எழுந்துள்ள தற்போதைய நிலையில் தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக ஆர்ஜெண்டினு அறிவித்துள்ளது.

பிரிட்டனின் நடவடிக்கை முற்றுகையல்லவென்றும், அது ஒரு தாக்குதல் என்றும் ஆர்ஜண்டினு குற்றம்சாட்டியுள்ளது. ஆர்ஜண்டினு செய்துள்ள புகார்பற்றி பந்தோபஸ்துசபை பரிசீலனைசெய்தே ஆர்ஜண்டினு பிரதிநிதி இக்கருத்தை தெரிவித்தார்.

போக்லண்ட் கடற்பிராந்தியத்தில் வெடிகுண்டு கண்ணிகள் வைக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. பிரிட்டனின் கடற்படை கப்பலில் விமானங்களுடன், சக்தி வாய்ந்த ஆயுதங்களும் இருப்பதாக மற்றொரு செய்தி கூறுகிறது.

ஆர்ஜண்டினுவின் சகல இறக்குமதி பொருட்களையும் தடைசெய்யும் அங்கீகாரத்தை ஐரோப்பிய பொருளாதார சமூகம் வழங்கியுள்ளது.

10 நாடுகளைக்கொண்ட இச்சமுகம் கூடி நேற்று இம்முடிவை எடுத்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. அலெக்சாண்டர் கெயிக், பிரிட்டன் படைகளும்' ஆர்ஜண்டினு படைக

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ். பொம்மை வெளியில்

# 8 வீடுகள் தீயில் நாசம்

## தற்போது சேர்ந்தநிதி

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக்கு தற்போழுது சேர்ந்துள்ள தொகை 500 கோடி ரூபாவுக்கு அதிகமானது. (க)

## யாழ். எம்.பி., அரச அதிபர் ஸ்தலத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். பொம்மைவெளியில் நேற்று நண்பகல் ஏற்பட்ட தீவிபத்தில் சுமார் 8 வீடுகள் எரிந்து சாம்பலாயின.**

**இத்தீவிபத்தில் பாதிக்கப்பட்ட 40 பேர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி சமுகசேவை பகுதியினர் ஆராயவிருக்கின்றனர்.**

தற்செயலாக ஏற்பட்டஇத்திவிபத்தில் பல ஏழைக் குடும்பங்கள் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளன.

ஒருவீட்டின் அடுப்பிலிருந்து கிளம்பிய தீப்பொறியினுல் தீப்பற்றியதாகவும் அது உடனே ஏனைய வீடுகளுக்கும் பரவியதாகவும் கூறப்படுகின்றது. பொம்மைவெளி 9ம் குறுக்குத்தெருவில் இத்திவிபத்து நிகழ்ந்தது.

நாவாந்துறை மற்றும் சுற்றுப்புறத்தைச் சேர்ந்தவர்களும் தற்செயலாக அவ்வழியே வந்த கடற்படையினரும்தீயை அணைப்பதில் ஈடுபட்டனர்.

இவ்விபத்தினுல் பாதிக்கப்பட்ட இடங்களை யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மற்றும் அதிகாரிகள் போய்ப் பார்த்து பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆறுதல் கூறினுர்கள். அப்பகுதிக்கு தற்செலாகச் சென்ற யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. சண்முகராசா, மற்றும் திரு. அப்பையா ஆகியோரும் தீயணைப்பில் ஈடுபட்டனர். (க)

## பாரத செயற்கைகோள் நல்லமுறையில் இயங்கிவருகிறது

புதுடில்லி, ஏப். 0 பாரதத்தின் பலநோக்க செயற்கைகோள் அமெரிக்க கனபரா முனையிலிருந்து நேற்றுப்பகல் 12.17 மணிக்கு விண்வெளிக்கு செலுத்தப்பட்டது.

1350 கிலோ கிராம் நிறையுள்ள இச்செயற்கைகோளை அமெரிக்க போர்ட் ஸ்தாபனம் மாதிரி வடிவம் அமைத்து தயாரித்தது. சிறிது பழுது ஏற்பட்டதால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க 24 மணிநேரம் தாமதமாகச் செலுத்தப்பட்டது.

41நிமிடத்தின்பின் தலைமைக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு தொடர்பு கிடைத்தது. நல்லமுறையில் இயங்குவதாக தலைமைக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது. இச்செயற்கை கோள் 35,700 கிலோ மீற்றர் தொலைவில் வலம்வரும். (க)

## கடத்தல் பொதிகள், செத்தல்மிளகாயானதாம்!

## சுங்க அதிகாரியும், ஆறு சுங்க பாதுகாப்பாளரும், தற்காலிக வேலைநீக்கம்

### இராணுவத்தினர் மீது ஒழுங்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கடற்கரைப்பகுதியில் இராணுவத்தினரும், சுங்கப்பகுதியினரும் கூட்டாகச் சேர்ந்து நடத்திய கடத்தல் வேட்டை சம்பந்தமாக ஐந்து அல்லது ஆறு இராணுவவீரர்கள் மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சுங்க அதிகாரி ஒருவரும், 6சுங்க பாதுகாப்பாளர்களும் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

11 பொதிகளை, சுங்கப்பகுதியினரும், இராணுவத்தினரும் கடத்தல் வேட்டையின்போது கைப்பற்றினர் என்றும் அப்பொதிகளை திறந்து பார்த்தபோது செத்தல்மிளகாய் காணப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக நடந்த விசாரணையில் ஆரம்பத்தில் கைப்பற்றிய 11பொதிகளும், இந்த செத்தல் மிளகாய் பொதிகள் அல்லவென்பது தெரியவந்தது. பின்னர் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின்பின் ஆரம்பத்தில் கைப்பற்றப்பட்ட பொதிகள் சிக்கியதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து 5 அல்லது 6 இராணுவ வீரர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. விசாரணையைத் தொடர்ந்து தற்போது ஒரு சுங்க அதிகாரியும், 6 சுங்க பாதுகாப்பாளரும் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். [க]

## சோவியத் உத்தியோகத்தர் பிரிட்டனிலிருந்து நாடுகடத்தப்பட்டார்!

லண்டன், ஏப். 10 சோவியத் யூனியனின் வர்த்தக உத்தியோகத்தரை உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரிட்டன் அவரை நாடு கடத்தியுள்ளது.

ஒருவருட காலத்திற்குள் வெளியேற்றப்பட்ட இரண்டாவது சோவியத் உத்தியோகத்தர் என லண்டன் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன! வர்த்தக உத்தியோகத்தருக்கு இராஜதந்திர அந்தஸ்து இருக்கவில்லை என்று கூறப்பட்டது.

இவர் முகவர்களைப் பயன்படுத்தி ரகசியத் தகவல்களை பெறமுயற்சித்தார் எனக் கூறப்படுகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் விக்டர் எனபவர் உளவறியமுயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் வெளியேற்றப்பட்டார். (க)

## அறிவித்தல்

இன்றுமுதல் 'ஈழநாடு' காரியாலயத்தின் சகல பிரிவுகளும் மானிப்பாய் வீதியிலுள்ள இல. 63 கட்டிடத்தில் வழமைபோல் செயல்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். விளம்பரம்- மற்றும் ஏனைய சகல விடயங்களுக்கும் இதே முகவரியில் தொடர்புகொள்ளவும். இரவு-பகல் டெலிபோன் தொடர்புகளுக்கு 8126.

-நிர்வாகி

## யாழ்மாவட்ட அமைப்பாளரும் பங்குபற்றினர்

[அனுராதபுரம்]

அனுராதபுரம் அசோ ஹோட்டலில், திருமதி சிறிமாவோ பண்டாரநயக்கா தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், வவனியா, முல்லைத்தீவு, மன்னுர் மாவட்ட கட்சி அமைப்பாளர்களோடு யாழ்ப்பாண மாவட்ட கட்சி அமைப்பாளர்களும் கலந்து கொண்டனர். [க]

## மிருசுவில் கொலைவழக்கு "1ம் எதிரி கத்தியினுல் 3 முறை குத்தினுர்"

### சகோதரன் சாட்சியம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் போவதற்காக எனது சகோதரனின் வீட்டிலிருந்து கண்டிவீதிக்கு வந்தேன். சந்தேக நபர் மூவரும்சந்தியில் நின்றுர்கள். நான்வரும் போது ஜெயம் என்பவர் சைக்கிளைப் பிடித்து இழுத்தார். நான் சைக்கிளைப்போட்டுவிட்டுவந்த பாதைக்கு ஓடினேன். எனது கைகளை ஜெயம் என்பவரும் சுகுமார் என்பவரும்அப்போது பிடிக்கும்போது 1ம் எதிரி துரைசிங்கம் கிறிஸ்கத்தியால் மூன்றுமுறை வயிற்றில் குத்தினுர்.

மிருசுவில் கொலைவழக்கில் சாட்சியம் அளிக்கையில் காலமானவரின் சகோதரன் வேலன் பாலசிங்கம் அல்லது துரைசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எல்.காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் சி. துரைசிங்கம், கி. சிவஞானம், கி. சிவ

(8-ம் பக்கம்பார்க்க)

## சிறிமாபிரிவுடன் சேரமுடிவு

[கொழும்பு]

ஹொரகொல்லையில் கூடிய அனுராபிரிவு சுதந்திரக்கட்சி, சிறிமா தலைமையிலான சுதந்திரக் கட்சியுடன் சேருவதென முடிவுசெய்துள்ளது. மே தினத்தை இரு பிரிவுகளும் சேர்ந்து நடத்துவதென்றும் முடிவு செய்துள்ளது. (க)



அன்பே உலகில் ஓங்கிடவும்
அறிவே எங்கும் நிறைந்திடவும்
துன்பே உலகில் நீங்கிடவும்
சுகமே என்றும் மேவிடவும்
பண்பே என்றும் தழைத்திடவும்
பாவம் யாவும் அகன்றிடவும்
பொன்னே அனைய போதனைசெய்
புனிதர் யேசு உயிர்த்தனரே.

—புலவர் ம. பார்வதிநாதசிவம்.

# உயிர்ப்பு ஞாயிறு மனித குலத்தின் ஒளியாகும்!

உமது விலாவில் நின்று யேசுவே தண்ணீர் ஊற்று பெருகிவந்ததே. அதனால் உலகின் அழுக்கு அனைத்தும் கழுவப் பெற்றது,
புத்துயிர் புலர்ந்தது
அல்லேலூயா! அல்லேலூயா!!

மனுக்குலத்தை மீட்க உலகில் மாட்டுத்தொழுவத்தில் பிறந்த இயேசு 33 வருடங்கள் மனிதனாக பாவமுக்ற்ற ஜீவியத்தினை நடாத்திய போதிலும் கள்வனைக் குற்றம் சாட்டப்பட்டு சிலுவை மரம் உயிரைப் போக்க காரணமாகியது.

பாங்காவிற்கு வழிபாடு செய்யும் ஆயித்த காலம் 40 நாட்கள் கடந்தன. இதுவருடம் தோறும் நடைமுறையிலுள்ள நிகழ்வு பாங்காவின் உச்சநிலை இயேசுவின் உயிர்ப்பு ஆனாலும் இதுசரித்திரமல்ல, பழம் கதையுமல்ல உண்மையில் அன்பின் மறு பெயர் உயிர்ப்பு.

ள்ருள் மறைந்து ஒளிபிறந்தது கிறிஸ்துவின் இறப்பு புதிய வாழ்வின் சமுதாயத்திற்கு மூலைக்கல்லாகியது.

''ஒளியும் உயிர்ப்பும் நானே வாழ்வும் வழியும் நானே! என்ற இறைவாக்கு நிறைவெய்தியது.

ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் கொண்ட ஒளி கல்லிலிருந்து ஆதிமனிதன் ஒளியை உண்டாக்கினார். ஒளியின் காரணகர்த்தா இறைமகன் யேசு. கல்லிருப்து உண்டாக்கப்புட்ட ஒளி இன்று கல்லறை யேசுவிற்கு உயிர்ப்பின் யேசுவிற்கு சான்று பகர்கின்றது.

மாபெரும் ஒளியாகும்

உயிர்ப்பின் ஒளியாகத் தோன்றிய அண்ணல் யேசு தமது தந்தை இறைவன் தமக்கு காட்டிய வழியை தமது சீடர்களுக்கும் காட்டி உங்களுக்குச் சமாதானம் என் தந்தை என்னை அனுப்பியது போல் நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார்.

அது மாத்திரமல்ல அவர்கள் மூலம் ஒளியாகிய தூய ஆவியைப் பொழிந்து எம்மை வழி நடாத்துகின்றார்.

யேசுவின் பணி உயிர்ப்பு என்ற வெற்றியில் முடிந்தது. என்பதை உணர்ந்து இவ்வுலக வாழ்வில் ஜீவிக்கும் சகலரும் எமது உடன் பிறப்புக்கள் என்ற நோக்கினை கொண்டவர்களாக அனைவருடனும் இணைந்து வாழவும் சமாதானம் அடையவும் இவ்வுயிர்ப்பு ஒளிகாட்டுவதாக

திருச்சபையின் திருவழிபாட்டுக்காலங்களில் மிகச்சிறப்பு வாய்ந்த திருநாள் பாங்காவாகும். அதிலும் உயுர்ப்பு ஞாயிறு மனித குலத்தில் ஒளியாகும்.

இறந்த உயிர்த்து வைத்து தனது உயிர் அண்ணல் யேசு உயிர்ப்பின் மூலம் மறைநூலின் மகிமையினையும் கிறிஸ்தவ மக்களுக்கு மாத்திரமல்ல உலக மக்களும் அறியும் வாய்ப்பினை ஏற்படுத்திய

- மற்றில்டா பாமினி செல்வராசா -

## யாழ்ப்பாணத்தில் இன்று

# ஒரு பத்திரிகாசிரியர் பாராட்டு பெறுகிறார்

காலத்தின் கண்ணாடியென விளங்குவது பத்திரிகை. ஒரு நாட்டின் உயர்வும் தாழ்வும் அங்கிருந்து வெளியாகும் பிரசுரங்கள் மூலம் அறியக்கூடியன. ஒரு நாட்டின் ஜனநாயகக் கோட்பாடுகளைப் பிறழாமற் பாதுகாப்பதும் பத்திரிகைகளே. உலகில் இடம்பெறும் ஒவ்வொரு புதினத்தையும் சுடச்சுட அறியப் பெரிதும் விரும்புகின்றனர் பொது மக்கள். ஆதிகாலையிற் பத்திரிகைச்செய்தியைப் பார்த்த பின்னர்தான் நீர் பருகுவது என்ற கொள்கையினர் கூட உளர். அவ்வளவுக்குப் பத்திரிகைச் செய்திகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. உலகின் பல பாகங்களிலும் நடைபெறும் செய்திகளைத் திரிபுசெய்யாமல் வாசக நேயர்களுக்கு வழங்குவதே பத்திரிகைத்தர்மமாகும்.

ஈழத்தில் பத்திரிகைத்துறையில் தினசரியாகவும் வாரமலராகவும் வெளிவந்து பிரகாசிக்கும் பத்திரிகையில் 'தினகரன்' பத்திரிகையும் குறிப்பிடத்தக்கது. இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு உழைத்தவர்களில் திரு. இரத்தினதுரை சிவகுருநாதன் முக்கியமானவர்.

பத்திரிகைகளின்வளர்ச்சிக்கு மூல காரணங்களாய் அமைபவர்கள் பத்திரிகாசிரியர்களே.

கொழும்புத்துறைத் தவமுனிவர் யோகசுவாமிகளின் அருளாசி பெற்ற திரு. சிவகுருநாதன் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பட்டதாரியாவர்.

''பழையன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவல காலவ்கையி
னானே''

என்பதில் நம்பிக்கையுள்ள திரு. சிவகுருநாதன் பழையன எல்லாவற்றையும்நீக்கவேண்டுமென்றோ, புதியன எல்லாவற்றையும் கொள்ளவேண்டுமென்றோ கருதாது, நாட்டுக்கு நலன் தரத்தக்கது எது என்ற ஆராய்ந்து அதை நிலை நாட்டும் பணியில் உழைப்பவர். அவர் பேனா அவ்வழிச் செல்வது யாவரும் அறிந்த செய்தியாகும். தளராத முயற்சியினால் அன்னார் சட்டத்தரணி ஆனார்.

பத்திரிக சிரியருக்கு ஊன்றியழுதும் மனப்பாங்கு இன்றி எமையாதது. அவ்வாறான் நெஞ்சுரம் பத்திரிகையாளர்களுக்கு இல்லையேல் ஜனநாயகத்தை ஒருபோதும் பேணிக் காக்கவே முடியாது. ஆசிரியரின் நெஞ்சுரத்துக்கு —நெறி நீங்காத தன்மைக்கு எடுத்துக் காட்டாயமைவது ஆசிரியத் தலையங்கம். பத்திரிகைக்காரன் தினசரி உலக அபிப்பிராயங்களை உருட்டித்திரட்டி ஆசிரியத் தலையங்கமாகச்சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றான் குறித்த தலையங்கமே பத்திரிகையின் முக்கிய அம்சமாகிவிடுகிறது. ஆசிரியத்தலையங்கத்தின் மூலம் பத்திராதிபரின் உணர்வை—சாதக பாதகங்களை —எதுவித காழ்ப்புமின்றித் தமது பேனாவின் வாயிலாக ஆசிரியத் தலையங்கம் தீட்டுவதில் திரு. ஆர் சிவகுருநாதன் அவர்கள் பின்னின்றதில்லை.

- அ. பஞ்சாட்சரம் -

நாட்டு மக்களிடத்தே அறிவை விருத்திசெய்ய வேண்டிய பத்திரிகையாளர்கள் விஷம் போன்ற கருத்துக்களை ஊட்டுவார்களாயின் அவர்களுக்கு அரசு ஏற்ற தண்டனை வழங்கவேண்டும். அவர்களை நாடு கடத்த வேண்டும் என்பார்கள் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பத்தித்திரிகைக்காரர்களால் நாட்டுக்கு நன்மையும் செய்ய முடியும் தீமையும் செய்யமுடியும். தீய கருத்துக்களை யாருமே விரும்பமாட்டார்கள்.

நாட்டுக்கு நல்ல கருத்துக்களை தாம் தலைமை தாங்கும் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்துவரும் பிரதம ஆசிரியர் திரு. இரத்தினதுரை சிவகுருநாதனை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவராய்த் தெரிந்திருப்பதில் எவ்வித நூதனமுமில்லை. பத்திரிகைத் துறையில் அநுபவம் வாய்ந்த அவரது நற்சேவை அவரை உழைக்கு பத்திரிகையாளர் சங்கததலைவராக மிளிர வைத்துள்ளது.

படாடோப வாழ்க்கையையோ, விளம்பரத்தையோ சிறிதும் விரும்பாது அமைதியாகப்பணிபுரியும் திரு. இ. சிவகுருநாதனுக்கு இன மத மொழி வேறுபாடின்றி பல ஸ்தாபனங்கள் பாராட்டுத் தெரிவித்திருப்பது பெருமகிழ்ச்சிக்குரியதே.

பழமையும் பெருமையும் வாய்ந்த யாழ். இந்தக்கல்லூரியின் பழைய மாணவரான திரு. சிவகுருநாதனுக்கு அன்னாரின் பல்கலைக்கழகப் பேராசிரியரான உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் அவர் பிறந்த மண்ணில் இன்று அவருக்குப் பொன்னாடை போர்த்திப் பேரறிஞர்கள் பலர் பாராட்டுரை வழங்க இருப்பது மேலும் பெருமை தருவதாம்.

### பாருக்குள்ளே நல்ல நாடு - 10

# கூடி மகிழ்வித்த கூடியாட்டம்

கதாகாலஷேபம் போல அமைந்ததான 'கணியான் கூத்து' இசை, உரையாடல்களுக்கு இடையே, பிரமிக்க வைக்கும் தாளக்கட்டுடன் அமைந்த நடனத்தைக் கொண்டது. எத்துணை நுட்பமான பாதவேலைகள்? எத்துணை வேகமான — இம்மியும் பிசகாத சுற்றுகள்?

ஆண்களே தான் பெண் வேஷமணிந்து ஆடுகிறார்கள்; என்ன நாணம் என்ன நளினம்

இந்த பாதவேலைகள்; சுற்றுகள் எல்லாம் பரதநாட்டியம் குச்சிப்புடி, கதக் என்று சாஸ்திரிய நடன அம்சங்கள் பலவற்றைக் கொண்டிருக்கின்றன. இது பரதரின் நாட்டிய சாஸ்திரத்துடன் இதற்கு உள்ள தொடர்பை மாத்திரமன்றி, தற்போதைய சாஸ்திரிய நடனங்களின் தோற்றுவாயையும் நமக்கு உணர்த்துகின்றன.

தவிலின் ஒருபக்க தட்டுப் போல் அமைந்த — மகுடம்' என்று அழைக்கப்படும் ஒரு தோல் வாத்தியம் ஒரு கையால் தாங்கிக்கொண்டு மறு கையால் வாசிக்கின்றார்கள். தவிலின் நாதத்தையே ஒத்திருக்கிறது, இது மற்றையது அஞ்சுமுகவீணை அதிலிருந்து சாஸ்திரிய ராகங்கள் பிரவாகிக்கின்றன.

முழக்கப்படும். இந்த இசை முழக்கம் 'கொட்டு' எனப்படும். மக்களுக்கு அறிவிப்பாக அமையும் இக் 'கொட்டு' இசைக்கப்படும் மாதிரியிலிருந்து என்ன கதை அன்று நிகழப் போகிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்வார்கள்.

ஆக, இந்த பாரம்பரிய மரபுகளையும் அந்த மாநாட்டு அரங்கில் இடம்பெற்ற கூடியாட்டத்தில் கண்டு கூடி மகிழ்ந்தோம்.

இதில் இன்னொரு சிந்தனைக்கும் சிறப்புக்கும் உரிய அம்சமும் உண்டு. இந்த சாக்கியர் மரபில் இரு கலைஞர்கள்தான் இப்போது இருக்கிறார்களாம். அதில் ஒருவருக்கு வயது 84. மற்றவர் மாதவ சாக்கியார்; அவருக்கும் கிட்டத்தட்ட அதே வயதுதான். அவர்தான் அன்று சென்னை மாநகரத்து அரங்கில் நள்ளிரவைத்தாண்டி விட்ட பின்னரும் எவரையுமே நகர விடாமல் கூடியிருக்க வைத்து அந்தகூடியாட்டத்தை அளித்தவர்.

மற்றையது, இரு சிறுமிகள் நண்ணியார்' பரம்பரையில் அவர்கள் தாம் கடைசி வாரிசுகள் காலையில் இடம்பெற்ற செய்முறை விளக்கததில் அவர்களின் கலை நயத்தையும் நயன சாகசத்தையும் பார்த்த போது அந்தச் சிறுமிகளிடத்து கலையுலகுக்குள்ள பொறுப்பு தெரிந்தது.

- மாலி -

மேடையில் இருபுறமும் குலைகளுடன் வாழையும் தென்னோலைகளும் கட்டப்பட்டிருக்கும் மேடையின் நடுவே முன்புறமாக ஒரு மீற்றர் உயரமான குத்துவிளக்கு ஒன்று வைக்கப்படும். அதில் ஒரு சுடர் பார்வையாளர்களையும் இரு சுடர்கள் ஆட்டக்காரரை நோக்கியதாகவும் இருக்கும். ஒரு படி நெல் வைத்து அதில் தென்னம் பாளைகளும் வைக்கப்படும். மேடையின் பின்புறத்தில் வாத்தியக் கலைஞர்களான நம்பியர்கள் அமர்ந்திருப்பர்.

பெரிய அளவினதான இரு பானைகள் மரச்சட்டத்தில் வைக்கப்பட்டு அதன் வாய் தோலினல் கட்டப்பட்டிருக்கும் 'மிழவு' எனப்படும் இதுதான் பாரம்பரிய வாத்தியம் வலது புறத்தில் ஒரு வெள்ளை விரிப்பு விரிக்கப்பட்டிருக்கும். அதில் இசைக்கட்டுப்பாட்டாளர்களான இரு நண்ணியார்கள் அமர்ந்திருப்பர். அவர்களே தொடக்க பாடலும் இசைப்பர் ஒப்பனை கதகளி போன்றது.

கணேச பூசை நடைபெற்ற நீண்ட நேரத்துக்கு இசை தமிழகத்தின இந்த 'மதருக்கூத்து' 'கணியான்கூத்து' ஆகியவற்றுடன்: கேரளத்தின்பிரசித்திபெற்ற 'கூடியாட்டமும்' நாட்டிய மகாநாட்டில் இடம் பெற்றது

சிலப்பதிகாரத்தில் கூறப்படும் கூத்துவகையில் இதுவும் அமைந்ததாகக் கூறப்படுகிறது. எப்படியெனினும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பிரசித்தத்தை இது பெற்றிருக்கிறது. கோவில்களில்மாத்திரமே ஆடப்பட்டு வந்ததோடு, குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களே இதனை ஆடியும் வந்திருக்கிறார்கள். 'சாக்கியர்' எனப்படும் இச் சமூகத்தவர்களுக்கு 'நம்பியார்களும்' 'நண்ணியார்களும்' ஒத்தாசை புரிவர். கோவில்களைச் சார்ந்தவர்களான சாக்கியர்களே பிரதான ஆட்டக்காரர். நண்ணியர்களும் இவர்களுடன் கூடவே பாடி ஆடுவர். நம்பியார்கள் வாத்தியக் கலைஞர்களும் ஒப்பனைக் கலைஞர்களுமாவர்.

கேரளத்துக் கோவில்களிலே 'கூத்தம்பலம்' என்று அழைக்கப்படும் விசேடஅரங்குகளும் இதற்காக அமைக்கப்பட்டிருக்கும். [தொடரும்]

# எண்ணெய்க் குதம்

## திருத்தி அமைக்கப்படும்

(கொழும்பு)

திருகோணமலையிலுள்ள சீனன்குடா எண்ணெய்க் குதத்தை திருத்தி சர்வதேசதமாக மற்றி அமைக்க பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

95 தாங்கிகளைக்கொண்ட இக்குதம் 40 வருடங்களுக்கு முன்னர் பிரிட்டிஷாரால் அமைக்கப்பட்டது. (வெ)

## ஆர்ஜண்டீனு போர் முழக்கம்

# "பிரிட்டன் தாக்கினுல் திருப்பித் தாக்குவோம்"!

புவர்னஸ் அயர்ஸ் ஏப். . 10

''பிரிட்டன் தாக்குதலை மேற்கொண்டால் ஆர்ஜன்டீனு எதிர்த்தாக்குதலை மேற்கொள்ளும்'' என ஆர்ஜன்டீனு வெளிவிவகார அமைச்சர் திரு. நிக்குராகொஸ்டா மெண்டிஸ் மீண்டும் சூளுரைத்துள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு மதி தாட்சருடன் இப்பிரச்னைக்கு தீர்வுகாண பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹேய்க் இன்று ஆர்ஜன்டீனு வந்து சேருவாரென எதிர்பாரார்க்கப்படுகின்றது.

இதே நேரத்தில் போக்லண்ட் தீவுகளை சுற்றியுள்ள 200 மைல் பிரதேசத்தை யுத்த பிரதேசமாக பிரித்தானிய அரசின் பிரகடனம் நாளையிலிருந்து அமுலுக்கு வருகிறது. இப்பிரதேசத்தில் காணப்படும் ஆர்ஜன்டீனுவின் கப்பல்கள் அப்படியே சமுத்திரத்தில் தாக்கப்படுமென மீண்டும் பிரிட்டன் ஆர்ஜன்டீனுவை எச்சரித்துள்ளது.

அதே நேரத்தில் பிரிட்டன் அரசின் கோரிக்கைக்குஇணங்க ஐரோப்பிய பொதுச்சந்தையின் 10 அங்கத்துவ நாடுகள் ஆர்ஜன்டீனுவுக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்தியும் மற்றும் பொருளாதாரத்தடைகளையும் விதித்துள்ளன. (கு)

## சேலை நெய்வதில் ஒரு சாதனை!

(அரியாலை)

அரியாலை தங்கா நெசவு நிலையத்தினரால் நாடத்தப்பட்ட 60 மணித்தியால நெசவுப் போட்டியில் 5½ யார் நீளமான 17 சேலைகளை நெய்து அரியாலைச் சேர்ந்த தா. தர்மரத்தினம் புதிய சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.

கிங்ஸ்லி கணேசன் என்பவர் 14 சேலைகளை நெய்து இரண்டாமிடத்தையும், பொ. அமிர்தலிங்கம் என்பவர் 13 சேலைகளை நெய்து மூன்றும் இடத்தையும் பெற்றனர். யாழ்ப்பாணம் குடிசைக் கைத்தொழில் இலாகா ஆசிரியர்கள் மத்தியஸ்தம் வகித்தனர்.

## விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் வருடப் பிறப்பு உற்சவம் இம் மாதம் 13ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

இவ் உர்சவத்தில் கந்த புராணபடனம், பஞ்சமுகார்ச்சனை, பஜனை அபிஷேக ஆராதனைகள் உட்பட வருடப் பிறப்பு விசேட பூஜைகளும் நடைபெறவிருக்கின்றன(கி)

## மதுரையில் பெரும் தீவிபத்து! தொழிற்சாலை, வீடுகள் நாசம்

சென்னை, ஏப் 10

மதுரையில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தொன்றினுல் 140 வீடுகளும் 32 பாத்திரம் செய்யும் தொழிற்சாலைகளும் எரிந்து பெரும சேதாரத்துக்குள்ளாகின.

தொழிற்சாலை ஒன்றினில் உள்ள ''சிலிண்டர்'' ஒன்று வெடித்தே இத்தீவிபத்துக்குக்காரணமென்று விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று நிவாரண நிதியாக 200 ரூபா கொடுக்கப்படும் என மதுரை கொமிஷனர் திரு. ஆள்வாய்ப்பிள்ளை தெரிவித்தார்.

மதுரைப் பொலிசாரும் தீ அணைக்கும் படையினரும் பெரும் சிரமத்தின்மத்தியிலே தீ மேலும் பரவாது கட்டுப்படுத்தினர்.

பலபொதுப்பணி மன்றங்கள் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்வதில் ஈடுபட்டுள்ளன. மதுரை மாநகர் கொமிஷனர் திரு.ஆழ்வாய்ப்பிள்ளை பாதிக்கப்பட்டோருக்கு மேலும் பல நிவாரணங்கள் பெற நடவடிக்கையெடுத்து வருகின்றுர். (கு)

## இந்தியசுங்க அதிகாரிகளிடம் சிக்கிய இலங்கையர்

சென்னை, ஏப். 10

இந்திய சுங்க இலாகா அதிகாரிகளின் திடீர் வேட்டையில் கடத்தலிலீடுபட்டுக் கொண்டிருந்த ஏழு இலங்கையர்கள் உட்பட பதினெருபேர் சிக்சிக் கொண்டனர்.

தனுஷ்கோடிக் கரையில் இக்கோஷ்டியினர் பிளாஸ்டிக் படகொன்றில் வந்துகொண்டிருந்த போதே இவ்வதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டனராம்.

கஸட் றேடியோ செற்றுகளும், பல ஆடம்பரப் பொருட்களும் கைப்பற்றப் பட்டுள்ளன. சுங்க அதிகாரிகள் நடவடிக்கை யெடுத்து வருகின்றனர். (கு)

## ''லோக்தளவிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர்கள் புதியகட்சி ஆரம்பிப்பார்கள்?

புதுடில்லி,ஏப். 10

இந்தியாவின் பழமை வாய்ந்த கட்சியும் எதிர்க்கட்சிகளிலொன்றுனமான 'லோக்தள'கட்சி உட்பூசல் காரணமாகபிளவுபடும் நிலையையடைந்துள்ளது.

ஓரிசாமாநில முன்னுள் முதலமைச்சர் திரு. விஜயபட்நாத் உட்பட கட்சிக்கட்டுப்பாட்டை மீறியதாக செயற்குழுவினுல் குற்றம் சாட்டப்பட்டு மூவர் இடைநிறுத்தப் பட்டுள்ளனர்.

இவர்கள் கட்சி விரோத நடவடிக்கைகளில் இறங்கி கட்சிக்கு பெரும் நெருக்கடியையேற்படுத்தினுராம். இவர்ச்ள் புதுக்கட்சியொன்றை ஆரம்பிக்கும் நோக்கத்துடன் சண்டிநகரில் ஆலோசனைகள் கூட்டமொன்றை நடாத்த உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (கு)


மங்களப்பேரிகை முழங்க அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

மக்கள் மனம்கவரும் பல்வேறு பொருட்களை
நியாயவிலையில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்

மின்சார உபகரணங்கள் மின்னியல்
பொருட்கள், காகிதாதிகள் பாடசாலை
உபகரணங்கள்

அன்பளிப்புப் பொருட்கள் அனைத்திற்கும்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும்,
மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனையாளரும்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(போன் : 8291 தந்தி : ''வாணர்சன்ஸ்''

(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக)

தலைமையகம் :

பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு 11.
போன் : 24821 — 28244

லெட்சுமிபவான்,

97, ஒல்ஹொட் மாவத்த, — — கொழும்பு - 11


## சுகாதாரப் பகுதி காவலர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மற்றும் சுகாதாரப்பகுதி காவலர்கள் தமது வேலை நேரத்தைக் குறைக்கும்படி அல்லது மேலதிக நேரம் வேலை செய்வதர்கான ஊதியத்தை வழங்கும்படி பொது சேவைகள் அமைச்சிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

காவலாளிகள் எனக் குறிக்கப்பட்டுள்ள நாங்கள் 12 மணி நேரம் வேலை செய்கிறேம். ஆனுல் எமது தரத்தில் உள்ள ஏனையவர்கள் 8 மணி நேரமே வேலை செய்கிறுர்கள். மேலும் அவர்களது சம்பள விகிதமும் எங்களைவிட அதிகமாகவே இருக்கின்றது. எனவே எமது வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் அல்லது எமது சம்பளத்தை கணிசமான அளவு உயர்த்தித்தாருங்கள் என்று கேட்டுள்ளனர்.

கே. கே. எஸ். செனட்டோரியம், தெல்லிப்பழை ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம் மார்பு சிகிச்சை நிலையம், நெடுந்தீவு ஆஸ்பத்திரி ஆகியவற்றைச் சேர்ந்த காவலாளிகள் கையெழுத்திட்டு கோரிக்கை மகஜர் ஒன்றை அமைச்சருக்கு அனுப்பியுள்ளனர். இதன் பிரதிகள் சுகாதார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## பெரியார் நினைவுத் தூண் திறக்கப்படும்

மதுரை ஏப் 10

அமரர் ஈ. வே. ரா. பெரியாரின் நான்காவது நினைவுத் தூணை இன்று மதுரையில் தமிழ் நாடு நிதி யமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் திறந்து வைப்பார்.

சென்னையில் ஒரு கோடி ரூபா செலவில் தந்தை ஈ. வே. ரா. பெரியாரின் நினைவு மண்டபமொன்றும் அமைக்கப்படுமெனவும்தெரிய வருகிறது. (கு)

## இன்று ''ஹிந்துசாத்'' ஏவப்படலாம்

புதுடில்லி. ஏப் 10

இந்திய செயற்கைக் கோளான ''ஹிந்துசாத்'' இன்று விண்வெளிக்கு ஏவப்படும்.

கடந்தவியாழக்கிழமைஏவப்படவிருந்த இக் ''கோள்', இறுதி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டு, நேற்று விண்வெளிக்கு ஏவுவதாக விருந்தும், மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இன்று நண்பகல் ''ஹிந்துசாத்'' விண்வெளிக்கு ஏவப்படுமென அறிவிக்கப்பட்டது. (கு)

# அறிவித்தல்

யாழ். குடாநாட்டு விவசாயிகளே!

பயிர்களைத் தாக்கும் பீடைகளைக்

கட்டுப்படுத்துவதற்கு

உங்களுக்குத் தேவையான

BAYER

## தமரேன் எல். சி. 60%

## மெற்றசிஸ்டொக்ஸ் ஆர். 25%

ஆகிய பீடைநாசினிகள்

இப்போது யாழ். யூனியன் ஏஜென்ஸியில்

கைவசம் உண்டு

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

## யூனியன் ஏஜென்சீஸ்

50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

2819

## யாழ். மருத்துவ சங்கம் நடாத்தும்

# மருத்துவ கண்காட்சி

பொதுமக்களுக்கு ஏற்படும் நோய்களை, வழங்கப்படும் சிகிச்சைகள் போன்றனவற்றை விளக்கி வைத்தியத்துறையின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுவதற்கென மருத்துவக் கண்காட்சியொன்றை, யாழ்ப்பாணம் மருத்துவ சங்கம் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் இம்மாதம் 21ம் திகதி முதல் 25ம் திகதி வரை ஐந்து தினங்களுக்கு நடத்தவிருக்கின்றது.

இக்கண்காட்சியை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் மாண்பு மிகு தூதர் 21ம் திகதி புதன் கிழமையன்று திறந்துவைப்பார்.

யாழ். மாவட்டத்திலே முதன்முதலாக நடத்தப்படவிருக்கும் இம்மருத்துவக் கண்காட்சியில் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள், அவற்றிற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகள் பற்றியும், மனித உடலுறுப்புக்கள் செயற்படும் முறை பற்றியும் விளக்கிக் காட்டப்படவிருக்கின்றன.

இத்தகைய விளக்கங்களை வழங்குவதற்கென, கண்காட்சியில் இடம்பெறவிருக்கும் விசேட அம்சங்களில், மருத்துவ சம்பந்தமான விடயங்கள்பற்றி பெருந்தொகையான பாடசாலை மாணவர்கள் எழுதிய கட்டுரைகளும், தயாரித்த சுலோகங்கள், சுவரொட்டிகள் என்பனவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

மனித உடலமைப்பு வடிவில் மாதிரிகளை அமைத்து, உடலின் உள் உறுப்புக்களில் ஏற்படும் தாக்கங்கள் பற்றியும், இக்கண்காட்சியில் எடுத்து விளக்கப்படும். இவ்விளக்கங்களை வைத்தியத்துறை சார்ந்த நிபுணர்கள் சிலர் வழங்கவுள்ளனர். அத்துடன் சலரோகம், இரத்த அழுத்தம் போன்ற பெரும்வியாதிகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பது பற்றியும் இம்மாதிரிகளிலேயே அந் நிபுணர்கள் விளக்கங்களை வழங்குவர். இவ்வாறு 'மாதிரிகள்' மூலமாக பொதுமக்களிடம் நோய்கள் பற்றி விளக்கப்படவிருப்பது ஒரு நவீன அம்சமாக விளங்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நம்நாட்டில், பொதுமக்கள் பலர் நோயாளிகளாக மாறும்போதே தமக்கு வழங்கப்படும் சிகிச்சை பற்றியும், தம்மில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் பற்றியும் அறிந்து கொள்கின்றனர். ஆனால் வெளிநாடுகளிலோ பொதுமக்கள் சுகதேகிகளாக இருக்கும்போதே புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் தொலைதொடர்பு சாதனங்கள் மூலமாகவும், இது போன்று நடத்தப்படும் கண்காட்சிகள் மூலமாகவும் வைத்திய முறைகள் பற்றி அறிந்து கொள்கின்றனர்.

நம் நாட்டில் இதுவரைகாலமும் மேற்கண்ட முறையில் வைத்தியத்துறைபற்றி பொதுமக்கள் அறிந்து கொள்ளச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டமை மிக அரிதென்றே கூற வேண்டும்.

எனவே நம் நாட்டவரும் தாம் சுகதேகிகளாகஇருக்கும் போதே வைத்திய முறைகள் பற்றி அறிந்து வைத்திருக்கும் பொருட்டும், புதிதாக ஏற்படும் வியாதிகள் பற்றியும், அவற்றிற்கு நவீன முறையில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் முறைகள்பற்றியும் தெரிந்துகொள்ளும் வகையில் இம் மருத்துவக் கண்காட்சி யாழ். மருத்துவ சங்கத்தவரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தவகையில், இரத்தத்தின் அமுக்கம், அதிலுள்ளசீனியின் அளவு போன்றவற்றைக் கணிப்பிடும் முறையும் இருதயத்தின் நிலைமை, அதன் துடிப்பு போன்றன வெளியே இயந்திரக் கருவிகளால் வரையப்பட்டு பதியப்படும்(E.C.G) முறைபற்றியும் இக்கண்காட்சியில் காண்பிக்கப்படவிருக்கின்றது. மேலும் தொலைக் காட்சிகள் வாயிலாகவும்வைத்திய சம்பந்தமான படக்காட்சிகளும் இவ் ஐந்துநாள் கண்காட்சியில் இடம்பெறவிருக்கின்றன.

யாழ். மருத்துவச் சங்கம் இக் கண்காட்சிபற்றித் தெரிவிக்கையில் இந்நாட்டிலே காணப்படும் சிகிச்சை முறைகள்பற்றியும் அவற்றின்விசேட தன்மைகள்பற்றியும் முழுமையாக விளக்கவே இக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்படுகின்றது.

பின்தங்கிய திணைக்கள ரீதியிலான கண்காட்சிகள் போல வைத்தியத்துறை சார்ந்தபிரச்னைகளை விளக்காது சிக்கனமாகவும், விவேகமாகவும் வைத்தியத் துறைபற்றி விளக்குவதே இககண்காட்சியின்நோக்கமாகும் எனத் தெரிவித்துள்ளது.

அத்துடன் மருத்துவச் சங்கத்தவருக்கென, மருத்துவ நூலகமொன்றை, இக் கண்காட்சியிலிருந்து கிடைக்கும் நிதி உதவியுடன் நிறுவுவதும் ஒரு நோக்கமாகும் எனமருத்துவச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

- அனந்த்

நேற்று டாக்டர் ஹனிமான் பிறந்த தினம்:

# ஹோமியோபதியின் சிறப்பம்சம்

மு. சிவராசா
(ஹோமியோபதி வைத்தியர்)

டாக்டர் சாமுவேல் ஹனிமான் அவர்கள் ஆங்கில வைத்தியத்தில் பட்டம்பெற்று புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்து ஹோமியோபதி என்று பெயர்சூட்டி அதனை வளர்த்தார். இன்று அவருடைய ஹோமியோபதி வைத்திய சாஸ்திரம் மிகவும் புகழ் பெற்று உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டு உன்னத நிலையை வகிக்கிறது.

ஹோமியோபதி வைத்திய முறையை உலகிற்கு அறிமுகம் செய்த டாக்டர் ஹனிமான் அவர்கள் "அவர் சொன்னார். இவர் சொன்னார் என்பதற்காக ஒன்றையும் நம்பி ஏற்றுக் கொள்ளாதே. ஒவ்வொன்றையும் தீர ஆலோசித்து நீயே நீதிபதியாக இருந்து முடிவு செய்" என்ற அவரது தந்தையின் உபதேசத்தை தாரகமந்திரமாகக் கொண்டு வியாதிகளுக்கு மருந்து கண்டுபிடித்தார்.

ஹோமியோபதி வைத்திய முறையில் எவ்வாறு ஒரு வியாதிக்கு மருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை ஹனிமானின் ஆராய்ச்சியில் உள்ள ஒரு உதாரணத்தைக்கொண்டு சற்றுக் கவனிப்போம்.

குளிருடன் வரும் முறைச் சுரத்துக்கு "கொயினா" நல்ல மருந்து என்று ஆங்கில வைத்தியம் கூறுகின்றது. டாக்டர் ஹனிமான் அவர்கள் கொயினா எப்படி சுரத்தைப் போக்குகிறது என்பதை ஆராய்ந்தார். ஒரு நாள் தானே கொயினாவைச் சாப்பிட்டுப் பார்த்தார். ஒன்றிரண்டு நாட்களில் அவருக்கு குளிர் நடுக்கலுடன் சுரம் ஏற்பட்டது. அச்சுரம் கொயினா சாப்பிட்டதினால் தான் ஏற்பட்டதா? அல்லது சாதாரணமாகத் தோன்றியதா? என்ற சந்தேகத்தினால் அவர் தன் நண்பர்கள் சிலருக்கும் இதேபோல் கொயினாவைக் கொடுத்தார். அவர்களுக்கும் கொயினா உட்கொண்டதால் சுரம் ஏற்படவே கொயினாவை நிறைய உட்கொண்டால் குளிர் முறைச் சுரம் ஏற்படும் என்பதை நம்பினார். இவ்விதமாகப் பல மருந்துகளைக் கொண்டு பல வருடங்கள் ஆராய்ச்சி செய்த பின்னரே ஹனிமான் அவர்கள் பின்வரும் உண்மையை வெளியிட்டார்.

ஒவ்வொரு மருந்தும் மனித உடலில் ஒவ்வொருவிதமான வியாதிக் குறிகளை உண்டாக்குகிறது. மருந்தின் பலம் அதிகமாய் இருந்தால் அதனால் உண்டாக்கப்படும் வியாதிக் குறிகளும் கடுமையாக இருக்கின்றன. நாட்பட்ட வியாதிகள், திடீரெனத் தோன்றும் மற்றொரு வியாதியினால் குணமாவது சில சமயங்களில் இயற்

(7ம் பக்கம் பார்க்க)

## பாரதியின் பார்வையும், தேசப்பற்றும்

# மகாகவியாக்கிற்று

## நூற்றுண்டுக் கருத்தரங்கில் உரை

(யாழ்ப்பாணம்)

இந்திய மக்களை அடக்கி ஆண்டுவந்த பிரித்தானிய காலனியாதிக்க வாதிகளுக்கும் இந்திய மக்களுக்குமிடையில் சமரசமற்ற எல்லைக் கோட்டைவரைந்த பாரதியார் அந்நியர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவதில் இறுதி மூச்சுவரை ஒரு உறுதியான நிலைப்பாட்டைக்கொண்டிருந்தார், அந்நியர்களுக்கு எதிரான தீவிர தேசிய எழுச்சிப்போக்கில் முழு இந்தியாவையும். முழு இந்திய மக்களையும் ஒரே நாடாகவும், ஒரே மக்களாகவும் பார்த்தார். அதனாலேயே வாழ்ந்தால் முப்பது கோடியும் வாழ்வோம்! வீழ்ந்தால் முப்பது கோடியும் வீழ்வோம்! எனச் சூளுரைத்தார். பாரதியின் ஆழமான தேசப்பற்றும் அகன்ற தேசியப் பார்வையும் அவரை இந்தியாவின் மகாகவி என்ற உச்சநிலைக்கு உயர்த்தியது,

மேற்கண்டவாறு தேசியகலை இலக்கியப் பேரவையின்பாரதி நூற்றுண்டு தொடர் ஆய்வரங்கின் மூன்றுவது நிகழ்வில் "தேசிய இயக்க நெறிகளும் பாரதியும்" என்னும் தலைப்பில் உரைநிகழ்த்திய திரு. கே. செந்திவேல் கூறினர்.

திரு. ந. இரவீந்திரன் தலைமையில் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி ஆய்வரங்கில் திரு. செந்திவேல் தொடர்ந்தும் கூறுகையில், பாரதியார் தன்னை ஒரு கவிஞன் என்றே பல சந்தர்ப்பங்களில் கூறுகிறார். ஆனால் வெறும் கவித்துவம் வகுத்த எல்லைகளுக்குள் பாரதியார் ஒருபோதும் தன்னை முடக்கிக் கொண்டவர் அல்லர். 1905ம் ஆண்டைத்தொடர்ந்த இந்திய தீவிர தேசிய எழுச்சியில் தன்னை இணைத்துக்கொண்ட பாரதியார் பழமையும் படிப்படியான சுதந்திரம் பெறல் என்ற கொள்கையைக் கொண்ட மிதவாதத்தலைவர்களையும் அவர்களது அரசியல் கருத்துக்களையும் கர்ணகடூரமாக எதிர்த்து வந்தார். மிதவாதப்போக்கை எதிர்த்த பாரதியார் மறுபுறத்தில் தனிநபர் பயங்கரவாதச் செயல்களையும் கண்டித்து நிராகரித்தார். அதேவேளை அந்நியர் ஆட்சிக்கு எதிராக சுதேசியம் அந்நியப் பொருள் பகிஷ்காரம், தேசியக்கல்வி ஆகியவற்றை முன்வைத்து தீவிர வெகுஜன எழுச்சிக்கு உத்வேகமூட்டி மக்களை தட்டி எழுப்புவதில் ஒரு உந்து சக்தியாகத் திகழ்ந்தார்.

அந்நியருடைய ஆட்சி இந்தியாவை விட்டு செல்வதை மட்டும் சுதந்திரம் எனப் பாரதியார் கொள்ளவில்லை. இந்திய மக்கள் மத்தியில் மண்டிக்கிடந்த பல்வேறு அடிமைத்தனங்கள், மூடநம்பிக்கைகள், ஏற்றத்தாழ்வுகள் என்பனவும் ஒழிக்கப்படுவதும் சுதந்திரத்தின் முழுமை என வற்புறுத்தினர். இந்தியா பிற்காலத்தில் இந்து முஸ்லிம் பிளவாலும் ஜாதிய முறைகளாலும் சமூக அநீதிகளாலும் பாதிக்கப்பட்ட விடயங்களை முன்கூட்டியே அவற்றின் உண்மை நிலைமைகளையும் தீர்வு முறைகளையும் பாரதியார் முன்யோசனையுடன் கூறியிருந்தார், பாரதியை அவர் வாழ்ந்த சமகாலத்தில் வைத்து ஆராயும்போது அவரை ஒரு கவிஞன் என்று கூறி மட்டுப் படுத்திவிட முடியாது. தீவிர தேசிய இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட ஒரு தேசிய வாதியாகவே நாம் மதிப்பீடு செய்துகொள்ள முடியும். அதுவும் தேசத்தையும் மக்களையும் அந்நியராட்சியில் இருந்து விடுவிப்பதில் இறுதி மூச்சுவரை உறுதியான நிலைப்பாட்டை வகித்த ஒரு தேசிய வாதியாகவே காண்கின்றோம். அந்த வகையில் பாரதியிடம் இருந்து நமது மக்கள் படித்துக்கொள்வேண்டிய விஷயங்கள் ஏராளம் உண்டு என்றே கூறவேண்டும் என்றார்.

# "மேற்கில் சோதிடக்கலை வேகமாக வளருகிறது"

- பண்டிட் நவரத்தினம்



(யாழ்ப்பாணம்)

"சோதிடம் இப்போது மேற்கில் மிக வேகமாக வளருகின்றது. அமெரிக்காவில் இன்று சோதிடக்கலை முன்னணியில் நிற்பதை அவதானிக்க முடிகிறது.

அமெரிக்காவில் மட்டுமல்ல ஐரோப்பா, கனடா போன்ற மேலைத்தேசங்களில் மேலைத்தேச சோதிடம் என்ற பெயருடன் சோதிடக்கலை சிறப்பாக முன்னேறிவருகிறது."

இவ்வாறு பிரபல சோதிடக் கலைஞரான பண்டிதர் கே. என். நவரத்தினம் மட்டக்களப்பில் ஆரம்பமான சோதிடர் ஆராய்ச்சி மகாநாட்டில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

கிழக்கிலங்கை சோதிடக் கலாமன்றத்தின் ஆதரவில் மூன்று தினங்களுக்கு நடைபெறும் மேற்படி ஆராய்ச்சி மகாநாட்டில் பண்டிதர் நவரத்தினம் மேலும் பேசுகையில்; எங்கள் நாடான இலங்கையிலும் சோதிடக்கலை வளம் பெற்று வருகின்றதென்றே கூறலாம். அதனால்தான் நீங்களும் ஓர் சோதிடக் கலாமன்றத்தை ஆரம்பித்து இம்முதல் மகாநாட்டை ஆரம்பித்துள்ளீர்கள். இவ் அரிய கைங்கரியத்துக்கு மட்டக்களப்புப் பெருங்குடி மக்களைப்பாராட்டுகின்றேன்.

காலத்தால், அந்நிய தாக்கத்தால், பொருளாதாரக்கஷ்டங்களால் அடக்கி ஒடுக்கப்பட்ட சோதிடம், ஆயுள்வேதம், நாட்டியம் சங்கீதம் முதலிய எமது மாபெரும் பொக்கிஷங்கள் உண்மையின் அடிப்படையில்வேரூன்றியமையால் அவை இன்றும் அழிந்து ஒழியவில்லை. ஆனால் தற்காலத்தில் உள்ள முன்னேற்றங்களுக்கு ஒப்ப ஏனைய கலைகளுடன் முன்னணியில் திகழவில்லைத்தான். இக்கலையை முன்னணிக்குக் கொண்டுவர உங்கள் கலாமன்றமொன்றே போதும். ஆகவே உங்கள் மகாநாட்டை வாழ்த்துகின்றேம்" என்றார். (கி)

விசேட அறிவித்தல்

புது வருடத்தை முன்னிட்டு
7-4-1982 முதல் 14-4-1982 வரை
எமது அலுவலகம்
திறக்கப்படமாட்டாதென்பதை
வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றேம்.

த பினன்ஸ்
கொம்பனி லிமிட்.,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
**தில்லுமுல்லு**



10thand 11th only
**யாழ்.றீகல்**
தினசரி10—30, 2—15, 4—30 7—00, 9—30
BARBARA STREISAND
in
**The Main Event**
(Color-boxing actionfilm)


# தீ மூட்டித் தற்கொலை!

(மாவிட்டபுரம்)

வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி காரணமாக 32 வயது குடும்பஸ்தர் ஒருவர் தமக்குத் தாமே பெற்ரேல் ஊற்றித் தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டார்.

காங்கேசன்துறையைச்சேர்ந்த தர்மலிங்கம் தருமராசா என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமான இவரது மரணவிசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் இடம் பெற்றது.

குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவு காரணமாக வாழ்க்கையில் விரக்தியுற்றுக் காணப்பட்ட இவர்: சம்பவதினம் தமது உடலில் பெற்ரேலை ஊற்றித் தீ மூட்டிக்கொண்டதாகவும், உடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற போதும் மரணத்தைத்தழுவிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. காங்கேசன் துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.


**வெஸ்லி**
11.4.82 வரை
தினசரி 2.30, 6.15, 9.15
துளசிராம், மஞ்சுபார்கவி-
**சங்கராபரணம்**


# பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதால் என்ன பயன்?

## 'சிவா' கேட்கிறார்

(யாழ்ப்பாணம்)

''புதிய பாராளுமன்றம் செல்வதை தமிழ் எம். பி.க்கள் பகிஷ்கரிக்கவேண்டுமென்று சிலர் அறிக்கைவிடுத்திருக்கின்றனர். புதிய பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதால் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் வண்.வடகிழக்குக் கிளையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கிளைத் தலைவர் சட்டத்தரணி சி. நாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எம். சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில், பலகாலம் இருந்த ஒரு இடத்திலிருந்து புதிய இடத்துக்கு மாறுவதுபோல்தான் புதிய பரராளுமன்றத்துக்கும் செல்வது சகல தொகுதி எம், பி.க்களும் புதிய பாராளுமன்றம் செல்லும்போது நாங்கள் மட்டும்போகாமலிருப்பதில் என்ன லாபம் என்று கேட்டார்.

எமது விடுதலை இயக்கத்தில் சேரும் அங்கத்தவர்கள் வேலை வாய்ப்புக்களையோ அல்லது வேறு லாபங்களையோ நோக்கமாகக்கொள்ளக்கூடாது. என்றும் தொண்டர்கள் என்ற நிலையில் இருக்கவேண்டும் என்றும் திரு. சிவசிதம்பரம் சொன்னார். பாராளுமன்றத்தில் இருப்பதால்தான் எமது பிரச்னைகளை எடுத்துச் சொல்லித்தீர்வுகாணமுடியுமென்றும் அவர் கூறினார்.

நல்லூர்த் தொகுதி அமைப்பாளர்களான திரு. பொ. கனகசபாபதி, திரு. க. அப்பையா ஆகியோரும் பேசினர்.

புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: சட்டத்தரணி சி. நாகராசா, பதில்தலைவர்கள்; திரு. க. பேரம்பலம், திரு. பூபாலசிங்கம், செயலாளர்: திரு. வ. தம்பித்துரை, பதில் செயலாளர்: திரு. வி. இராஜேஸ்வரன். பொருளாளர் திரு. சு. சண்முகராசா, உறுப்பினர்கள் 6 பேர். (மா)

# "அபிவிருத்தி நிதியை நேர்மையாகச் செலவிடவேண்டும்"

(மண்டைதீவு)

''பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் தொகுதி அபிவிருத்திநிதியை நேர்மையான முறையிலே செலவிட திணைக்கள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் முன் வரவேண்டும்''.

இவ்வாறு, நேற்றுமுன் தினம் தொகுதி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வீதிகள் புனரமைப்புப்பற்றிய மாநாடு வேலணை பெருந்தெருக்கள் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றபோது காவலூரர் எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கலந்து கொண்டு கூறினார். அவர் பேசுகையில் கூறியதாவது;

வீதி வேலைகளைச் செய்வதற்குரிய மதிப்பீட்டுத் திட்டத்தின் கணக்குகளை எமது பார்வைக்கும் வருங்காலத்தில்தெரியப்படுத்தவேண்டும். அத்துடன் அப்பகுதி கிராமோதய சபைத் தலைவர்கள் நடைபெறும் வேலைகளை மேற்பார்வை செய்வதற்கும் அனுமதி வழங்கவேண்டும்''.

இம்மகாநாட்டில் தீவுப்பகுதி நிறைவேற்று பொறியியலாளர் திரு. க. பத்மநாதன் வட பகுதி பிரதம பொறியியலாளர் திரு. எஸ். பாலேந்திரா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# தறணன் தேசிய சேவைத்திட்ட அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

அராலி தறணன் தேசிய சேவைத் திட்ட அங்குரார்ப்பண வைபவம் நேற்றுமுன் தினம் யாழ் மாவட்ட இளைஞர்சேவை அதிகாரி திரு. க. சிவானந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் உதவிஇயக்குநர் திரு. அ. நாகேந்திரன், வட்டுக்கோட்டை இளைஞர் சேவை அதிகாரி திரு. து. சிவதட்சணாமூர்த்தி, அராலி மேற்கு, வடக்கு கிராமோதயசபைத் தலைவர் திரு. நா. குகராசா, திரு. ச. நடராசா திரு. வி. வி. மூர்த்தி மற்றும் பலரும் கலந்து தங்கள் ஆலோசனைகளை தெரிவித்தனர். (கு)


**ஶ்ரீதர்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஶ்ரீபிரியா நடித்த
**பொல்லாதவன்**
(ஈஸ்ட்மன் கலர்)



**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
Winner of Five Academy Awards
ROBERT DE NERO in
**THE DEER HUNTER**
(Color-Scope, வயதுவந்தவர்களுக்கு மட்டும்)
Based on the Vietnam War
13-ம் திகதிமுதல் காத்தவராயன்



**ராணி** (யாழ். நகர்) தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)
அனேக ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புத்தாண்டு வரைக்கும் பறந்துகொண்டிருப்பேன்.



**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - கே. ஆர். விஜயா - நாகேஷ்
**நல்ல நேரம்**
[புதிய பிரதி]



**சாந்தி** (யாழ்நகர்) 10—30, 2—00, 4—30, 7—15, 9—45
**Three Musketeers**
Comedy—Color
A Family Entertainment
பயங்கர வாள் சண்டைகள் நிறைந்த படம்



**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
**Flying High**

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
**கற்பகம்**



3-வது ஜனத்திரள் வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஒரு சினிமா நடிகைக்கு ஏற்படும் இன்னல்களையும் சோதனைகளையும் இயல்பாகவும் மனதைத்தொடும் வகையிலும் இயக்கியிருக்கும் விதம் இத் திரைப்படத்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவியுள்ளது. —Movieland 1980 December
தெலுங்கில் 500 நாட்களுக்குமேல் ஓடிய 'சிவரஞ்சனி'படத்தின் மறுதயாரிப்புத்தான்
கமலஹாசன்—ரஜனிகாந்த்—சிவாஜி கணேசன்—ஶ்ரீபிரியா—சுபாஷிணி—ஹரிபிரசாத—மோகன்பாபு நாகேஷ் மற்றும் பலர் நடித்த
★**நட்சத்திரம்**★
(ஈஸ்மன்ட் கலர்)


# "நெசவாளர்களுக்கு உதவ அரசு முன்வரவேண்டும்"

## நெசவுப் போட்டியில் கல்லூரி அதிபர் கருத்து

(அரியாலை)

''நெசவுத்தொழில் பாரம்பரிய தொழில் என்ற நிலைமை மாறி இன்று எல்லோராலும் மேற்கொள்ளப்படும் சீவனோபாய தொழிலாக மாறியுள்ளது. நெசவுத் தொழிலாளர்களால் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை வசதியின்றி பெருமளவில் தேங்கிக்கிடப்பதால் இத் தொழிலையே நம்பி வாழ்வோர் இதனையே நாளுக்கு நாள் கைவிடும் நிலைமைக்கு ஆளாகிவருவது வருந்தத்தக்கதாகும்.''

இவ்வாறு நல்லூர் ஆனந்தா வித்தியாலய அதிபர் திரு. நா. இராமலிங்கம் அரியாலை மேற்கு தங்கா நெசவு நிலையத்தில் நடைபெற்ற அறுபது மணித்தியால நெசவுப்போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. எம். எஸ். அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் திரு. நா. இராமலிங்கம் தொடர்ந்து பேசுகையில் அரசாங்கம் மேற்கொள்ளும் தாராள இறக்குமதிக் கொள்கையால் நம்நாட்டிலிருந்து பெருந்தொகையான பணம் வெளிநாட்டுச் செலாவணியாக வெளிநாடுகளுக்குச் செல்கிறது. மூன்றரை மணிநேரத்தில் ஐந்தரை யார் நீளமான சேலையை நெய்து வெட்டக்கூடிய மனித சக்தியுள்ள வாலிபர்கள் வாழுகின்ற இந்த நாட்டிலே அவர்களால் செய்யப்படும் கைத்தறித்துணிகள் பெருமளவில் விற்பனையின்றி இருப்பது வருத்தத்திற்குரியதாகும். இயந்திரத்துடன் மனிதன் போட்டியிட முடியாவிட்டாலும் அவனது மனித சக்திக்கு மதிப்பளிக்கவேண்டும். இத் தொழிலை மேற்கொள்வோருக்கு கடன் வசதி வழங்கவும், இவர்களால் உற்பத்திசெய்யப்படும் பொருட்களைக் கொள்வனவுசெய்துவிற்பனவு செய்யும் பொறுப்பையும் அரசாங்கம் மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

### அகில இலங்கை ரீதியில்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இளைப்பாறிய ஆளணி முகாமையாளர் திரு. சி. ஈ. சுணரத்தினம் பேசுகையில் இப்படியான நெசவுப் போட்டிகளை அகில இலங்கை ரீதியில் நடாத்த அரசாங்கமும் தனியார் ஸ்தாபனங்களும் முன்வர வேண்டும். கைத்தறி ஆடைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். இத் தொழிலைச் செய்வோருக்கு அவர்களுடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்க வழி செய்யவேண்டும். போட்டியில் தோல்வியடைந்தோர் மனந்தளராது தொடர்ந்தும் வெற்றிக்காக உழைக்கவேண்டும். இத்தொழிலைச் செய்வோருக்கு என்று குறிப்பிட்டார்

போட்டி அமைப்புச்செயலாளர் திரு. கா. பீதாம்பரம் நன்றி கூறினார். போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை திரு. குணரத்தினம் வழங்கினார்.

# பாரிஸில் பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் மாநகரில் பாரதி நூற்றுண்டு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 6ந் திகதி கோலாகலமாகக் கொண்டாடப்படவிருக்கின்றது.

இவ்விழாவையொட்டி கட்டுரை, கவிதைப் போட்டிகளை விழாக்குழுவினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

பொது மக்கள் பிரிவு, கல்லூரி மாணவ, மாணவி பிரிவு பள்ளி மாணவ மாணவி பிரிவென, மூன்று பிரிவுகளில் மேற்படி போட்டிகள் நடத்தப்பட்டு பணப் பரிசுகளும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (கி)

# வரி விளம்பரம்

## வகுப்புக்கள்

H tel Management புதிய வகுப்புக்கள் 10—04—82ஆரம்பம். ஜீ. சி. இ. (சா), படித்த இருபாலாரும் கற்கலாம். நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும். J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத கடவைக்கு அருகில்) 2792

வெளிநாடுசெல்பவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். ஆங்கிலம் இலகுவாக பேச, எழுத, வாசிக்க நவீன முறையில் முப்பது நாட்களில் கற்பிக்கப்படும். முன் அனுபவம் தேவை இல்லை. தனியே விசேட கவனம் செலுத்தப்படும். ஆரம்பம் 10—04—82, J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத கடவைக்கு அருகில்) 2793

மீட்கப்படாத அடைவுப் பொருட்களின்

## ஏலவிற்பனை

மக்கள் வங்கி, யாழ்ப்பாணம், நவீன சந்தைக்கிளையில் 1980ம் ஆண்டு ஆவணிமாதம் 06ம் திகதி வரை அடைவு வைக்கப்பெற்று 1982ம்ஆண்டு சித்திரை மாதம் 16ம் திகதி வரை மீட்கப்படாத நகைகள் யாவும் 1982ம் ஆண்டு சித்திரை மாதம் 17ம் திகதி காலை 10.00 மணியளவில், யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தையிலமைந்துள்ள வங்கியின் கட்டிடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றேம்.

முகாமையாளர்.

மக்கள் வங்கி,
நவீனசந்தைக் கிளை,
யாழ்ப்பாணம்,
17.03.1982. 2727

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் ஆசிரியர் வீடமைப்புத் திட்டத்திற்கு அண்மையில், P. S. வீட்டிற்கு அருகில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: த. சண்முகராசா, சட்டத்தரணி, கோண்டாவில். 2773

கண்ணாடி சோக்கேஸ், மின்சார ஆட்டுக்கல், மின்சார பொயிலர், மேசைகள், கதிரைகள், இட்டலிக்கொப்பரை, ஆட்டுக்கல், தோசைக்கல், மற்றும் சைவ கோட்டல் பாவனைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு. சாந்தி லொட்ஜ், 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2811

மானிப்பாய் பட்டினசபை, இலங்கை வங்கி, பெற்றேல் செட், மகளிர் கல்லூரிக்கு அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக பத்துப்பரப்பு காணி விற்பனவுக்கு உண்டு. விபரங்களுக்கு: V.S. கந்தையா, தேநீர்கடை, மானிப்பாய். 2794

உரும்பராய் கோப்பாய் றோட்டில் ஞான வயிரவர் கோயிலுக்குமுன் உள்ளகடைக் கட்டிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் க. அப்புத்துரை, வயிரவர் கோயிலடி, உரும்பராய். 2781

Notional Video Deck, Model NV7000 EN and Piano (challen) உடன் விற்பனைக்குண்டு. 88/3, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7185. 2822

## விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் 1½ பரப்பு, பிறவுண்றோட்டில் 3 பரப்பு, பிறவுண்றோட் ஒழுங்கையில் 1 பரப்பு, ஓட்டுமடச் சந்திக்கு கிட்ட 38 பரப்புவேறு காணிகளும், வீடுகளும், யாழ். இந்துக் கல்லூரிக்கு கிட்ட உண்டு. நேரில் வரவும் 78, அரசடிவீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 2825

மானிப்பாய், சோதிவேம்படி லேனில் உள்ள நாலு பரப்பு காணி வீட்டுடன், விற்பனைக்குஉண்டு. திரு. S. மார்க்கண்டு J.P. மானிப்பாய் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 2824

சுன்னுகம் தெற்கு சிவபூதராயர் கோவில் ஒழுங்கையில் வீடுகட்டுவதற்கு உகந்த பதின்ஞெரு பரட பப்பனங்காணி விற்கப்படும். விளம்பர இல. 2821 மே/பா. ஈழநாடு, த.பெ. எண். 49, யாழ்ப்பாணம். 2821

புத்தம் புதிய இத்தாலி மொடல் 10 கன அடி, இரு கதவுகள் உள்ள அல்கோர் குளிர்சாதனப்பெட்டி விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு: செல்வரத்தினம் 65 கொழும்புத்துறை, வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். 2791

மிருசுவில் புகையிரத நிலையத்திலிருந்து 1 மைல் தூரத்தில் உசன் என்னுமிடத்தில் 22 பரபபு தென்னை, பனை மரங்களுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும் பண்ணை முயற்சிகள் ஆரம்பிக்க விரும்புவோர்க்கும் உகந்தது. தொடர்பு: S. V. S. கனகரத்தினம் ''ஈஸ்வர பவனம்'', உடுவில்மேற்கு, சுன்னுகம். 2796

புதுவருட தினத்தன்று மருதடி விநாயகர் ஆலய முன்றலில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் எமது தயாரிப்புக்களான அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி அண்ணா சேயிலை, அண்ணா பத்தி மற்றும் ஜெயந்திபத்தி, புளூம் பவுடர், சோயாற்றின் ஆகியவற்றை வாங்குவதோடு இனும் பொருட்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா இன்டஸ்றீஸ், இணுவில். 2813

மணமகள் தேவை. யாழ்ப்பாணம் இந்து உயர்குல 30 வயதும் இங்கிலாந்தில் சிவில் என்ஜினியராயிருக்கும் தனது மகனிற்கு டாக்டர், அக்கவுண்டன்ற் உத்தியோகம் பார்க்கும் மணப்பெண் தேவை. சீதனமும் கவனிக்கப்படும். சாதகக் குறிப்புடன் முழுவிபரமும் முதல் கடிதத்தில தரவும் விண்ணப்பிக்க, விளம்பர இல. 2787. மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2787

தெல்லிப்பழைபண்டத்தரிப்பு வீதியில் ''கூத்தஞ் சிமா'' சந்தைக்கு எதிரேயுள்ள 7 பரப்பு வீடுகட்டக்கூடிய காணி மின்சார வசதியுடன் 100 பனைக்குமேல் உண்டு. இரு துண்டுகளாகப் பிரிக்கலாம், கீரிமலை—சண்டிலிப்பாய் வீதி. விளான் சந்திக்கு அருகாமையில் ''ஆத்திஒலை'' 7½ பரப்பு வீடுகட்டக்கூடிய தோட்டக் காணி, பரந்தன்—முல்லைத்தீவு வீதியில் 66 அடிப் பாதையிலுள்ள ''புளியம்பொக்கனை'' (மத்திய வகுப்புத் திட்டம்) 10 ஏக்கர் திருத்திய காணி ஆகியன விற்பனைக்குண்டு அளவையாளர் படங்கள் உண்டு. விபரங்களுக்கு: விண்ணப்பிக்க விளம்பர இல 2754 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2754

## WANTED

Wanted Storekeeper with knowledge of Agro-chemicals. Ten years experience prefered Apply indicating salary required and cash security can offer Autos Limited Jaffna. 2827

Teachers in hair styling cake making, flower Arrangement, dress cutting etc Vani Education centre 15/1, Murugesar lane: Nallur, Jaffna 280

## தேவை

சோடாப்பெட்டி ஏற்றி இறக்கி வேலைசெய்யக்கூடிய கூலியாட்களும், வான் (VAN) விநியோகம் செய்யக்கூடியவர்களும் தேவை. நேரில்வரவும் உரிமையாளர், பிள்ளையார் ஸ்ரோஸ். 2826

யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு வான் விற்பனைப் பிரதிநிதிதேவை. வான் ஓட்டும்லைசென்ஸ் இருப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பிக்கவும். பெற்ரு டிஸ்ரிபியூற்றேர்ஸ், 29/3, றக்கா வீதி, யாழ்ப்பாணம். 2798

அனுபவமும் நல்லொழுக்கமுள்ள குருப்பட்டம் பெற்ற அந்தணக்குரு குடும்பத்துடன் தேவை. வசிப்பதற்கு சகல வசதிகளுடன் வீடு உண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும். கு. சிவசுப்பிரமணியம் பெரிய முருகமூர்த்தி கோவில் பிரான்பற்று வளவு, பண்டத்தரிப்பு. 2806

மோட்டார் சைக்கிள்கள் திருத்துவதில் நன்கு அனுபவம் வாய்ந்த மெக்கானிக் உடன் தேவை. அனுபவத்தையும், எதிர்பார்க்கும் ஊதியத்தை குறித்தும் நற்சான்றிதழ் பத்திரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். 4 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2812

## WANTED

Wanted Accounts Clerks with at least ten years experience. Capab e of maintaining complete set of books and preparing final accounts. Indicate salary required when applying. Autos Limited, Jaffn. 2828

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் புதுறோட் இல. 23 இலக்கமுடைய 4 பரப்பு 8குளி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: R. றேசலின், இல: 2, ஒடக்கரை வீதி றெக்ளமேசன், யாழ்ப்பாணம் 2749

சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

ஏழாயிரத்தி நூற்றிநாற்பத்திரண்டு வெற்றுச்சாக்குகொள்வனவு செய்வதற்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகிறது. கேள்விகள் சங்கத்தில் வைப்புப்பணம் ரூபா 300/-ம் கேள்விப்பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்திப்பெற்ற படிவத்தில் 20/4/82 மு. ப. 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் மெழுகிட்ட உறையில் ''சாக்குக்கேள்வி'' என்று எழுதிப்பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். அல்லது சங்கத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியுள் இடப்படவேண்டும். கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ சங்கத்தின் இயக்குநர்சபைக்கு உரிமையுண்டு.

பொதுமுகாமையாளர்.
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

சாவகச்சேரி,
8/4/82. 2830

## ஹோமியோபதி

(5ம் பக்கத் தொடர்ச்சி)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கையாய் ஏற்படுகிறது. அதாவது ஒரு வியாதியினுல் தென்படும் குறிகளைப் போன்ற குறிகளை உண்டாக்கும் வல்லமையுள்ள மருந்தை உபயோகிக்க வேண்டும் அதனுல் வியாதி நீங்சம் இதுவே ஹோமியோபதி வைத்திய முறையின் தத்துவம்.

## வீட்டு மரவேலைகள்

வீட்டு கதவு, நிலை, கூரை ஆகிய வேலைகள் குறித்த தவணையில் புதிய டிசைன்களில் செய்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

V. சிவம்
[illegible] வல்லை றோட்,
சங்கானை கிழக்கு சங்கானை.

கிளை: No 40, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம். 2784

சிசில் குளிர் சாதனப் பெட்டிகள்
SISIL REFRIGERATORS

★ 6,8 கன அடிப்பெட்டிகள் (சாதாரணம் & டிலுக்ஸ் மொடல்கள்) மிக சொற்ப தொகையே கையிருப்பில் உள்ளதால் உங்கள் தேவைக்கு உடனே முந்துங்கள்.

★ ஒரு வருட உத்தரவாதம் உள்ளது. எல்லா உப உறுப்புகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

★ சகல விதமான பிழைகளை திருத்துவதும், பெயின்ற் அடித்தும் தாமதமில்லாமல் செய்து கொடுக்கப்படும்.

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.**
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 234

## பதவிவெற்றிடம்

1. மரத்தளபர்டங்கள் நல்ல முறையில் பொலிஸ் பண்ணக் கூடியவர்கள்.
2. தச்சு வேலை செய்யக் கூடியவர்கள்.
3. நிர்வாக மேற்பார்வையாளர்கள்.
4. றேடியோ திருத்துனர்கள் உதவியாளர்கள்.
5. காசாளர் கணக்கியல் அனுபவம்மிக்கவர்கள் உடன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்:

**டில்கா பேணிச்சர் பலஸ்**
234, 236, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8186

## பின்போடப்பட்டது

தவிர்க்கமுடியாத சூழ்நிலை காரணமாக காரைநகர் புதுறோட் சந்தம்புளியடி சரஸ்வதிசனசமூக நிலையத்தால் வருடப்பிறப்பன்று நடத்தப்படவிருந்த அதிஸ்ட்டலாபச் சீட்டுழுப்பு பின்போடப்பட்டுள்ளது. என்பதை அறியத்தருகிறேம். 26.10.82ம் திகதி அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகிறேம். 2829

# VACANCY

An organisation involved with groundwater investigation and development, construction of tube wells, water supply project has the following vacancies. Those who are interested may apply in writing. Canvasing in any form will be considered as a disqualification

1. Engineers (Civil) — Should have B.Sc. Engineering Degree and preferably age below 30 years.
2. Engineering Assistants — Should have J.T.O. (Civil) or equivalant and minimum of 3 years experience.
3. Draughtsman — Should possess certificate of draughtsmenship course from Govt. approved institution with minimum of 3 years experience in al type of engineering Drawings
4. Offiice Attendant — Should have passed G.C,E. (O/L) Exam and be able to speak and understand English.
5. English Steno/Typist — Should have a minimum of 40 wpm in Typing and 80 wpm in shorthand Experience preferable.

All posts are temporary for a maximum period of 12 months. Salary negotiable. Applications containing all relevant data should be addressed to the Managing Director before 15—04—1982 under registered cover.

GLOBAL ENGINEERING TECHNOLOGY SERVICES
32, Kachcheri Nallur Road, — Jaffna.
2817

"பொருளாதாரத்தை வளர்க்க

# முன்னேற்றகரமான தொழில்களில் பெண்கள் ஈடுபடவேண்டும்"

(சாவகச்சேரி)

"கூட்டுறவியக்கம் ஒரு தனி மனிதனுக்காக இயங்குவதாக இருக்கப்படாது. ஒவ்வொருவரும் கூட்டாகத் தொழிற்பட்டு பொதுமக்களின் நன்மைக்காகப்பாடுபடவேண்டும். பெண்களில் சிலர் உத்தியோகம் பார்ப்பவர்களாக இருந்தாலும் அவர்களும் தங்கள் ஓய்வுநேரங்களில் முன்னேற்றகரமான தொழில்களில் ஈடுபட்டுப் பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும். இதனுல் ஆண்கள் உழைக்கப் பிறந்தவர்கள். பெண்கள் சமைக்கப் பிறந்தவர்கள் என்ற மனநிலை மாறும்."

சாவகச்சேரித் தொகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மாதர் சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றிய தேசியக் கூட்டுறவுச் சபை மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினுர்.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமண்டபத்தில் தலைவர் திருஎஸ். வி. வைத்திலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு உபதலைவர் ச. சரவணமுத்து கல்விக்காரியதரிசி திருஎஸ். தியாகராசா உட்பட சாவகச்சேரித் தொகுதி 23 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளிலிருந்தும் மகளிர் கலந்து கொண்ட கருத்தரங்கில் தொடர்ந்துதிரு. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டதாவது:

எங்கு பார்த்தாலும் இன்று குடும்பவரவு செலவு திட்டத்தைப் போடமுடியாதவர்களாக இருக்கிறோம் — காரணம் பொருளாதார நெருக்கடி இதனுல் எத்தனையோ குடும்பங்கள் சீர்குலைந்து இருக்கிறது. பெண்கள் சமைத்தல் மாத்திரம் தான் தங்கள் வேலை என்று தனியே சமையல் வேலையில் ஈடுபடுகிறுர்கள்.

ஆண்களோடு சரிநிகர் சமாமானகப் பெண்களும் தொழில் செய்ய ஆரம்பித்தால் இந்த நெருக்கடிப் பூசல்களிலிருந்து தப்பிக் கொள்ளலாம். நமது பகுதியில் 500 ரூபாவிற்குக் குறைந்த வருமானம் பெறுபவர்கள் 80 சதவிதமானேர் உள்ளனர். எனவே பெண்களும் தையல் வேலை வீட்டுத்தோட்டம், கோழி வளர்ப்பு அப்பளம் செய்தல், ஜாம் செய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டு வருமானத்தைப் பெருக்கமுற்படவேண்டும்.

### 5000 ரூபா வழங்கும்

எங்கள் தலைமைப்பீடம் மாதர் குழுதயாரிக்கிற திட்டங்களுக்கு 5000ரூபா வரை கொடுக்க ஆயத்தமாக இருக்கிறது. மாதர்களுக்கென்று தலைமைப்பீடம் வைக்கும் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளவேண்டும்.

### சேமிப்பில் ஈடுபடுங்கள்

தலைவர்திரு. எஸ். வி. வைத்திலிங்கம் பேசுகையில் சேமிப்பு மூலம் எல்வாறு பொருளீட்டலாம் என்பதை விளக்கினுர். மாதம் 10 ரூபா கட்டி 30மாத முடிவில் 350 ரூபா பெறலாம். என்றும்பெண்கள் சீட்டுப்பிடிக்கிற காசை இவ்விதம் போட்டால்நம்பிக்கையானதுஎன்றும் கூறிகட்டைவேலிச்சங்கம் 1750 பேரைச்சேர்த்துச் சேமிப்பில் ஈடுபட்டுவருவதை உதாரணம் காட்டினுர். ஒருகுடும்பத்தில்ஓர் பெண் குழந்தை பிறந்தவுடன் அதற்கு நகைபோட்டு அழகு பார்ப்பதை விடுத்துஅப்பிள்ளையின் பேரில் 5000 ரூபா போட்டால் அப்பிள்ளை 21வது வயதில் மூன்றரைலட்சரூபா பெறக்கூடியதாக இருக்கும். என்று' ஆகவே மகளிர் குழு இவற்றைக் கருத்திற்கொண்டு முன்னேற்றகரமான செயற்பாடுகளில் ஈடுபடும்படிகேட்டுக்கொண்டார்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக கீழ்காணுவோர் தெரிவாகினர். தலைவர் திருமதி அமிர்தா மகிந்தா, காரியதரிசி திருமதி யோகரத்தினம் செல்லையா, தனுதிகாரி திருமதி சி. செல்லக்கிளி.

இவர்களோடு மாவட்ட உறுப்பினர்களுக்காக திருமதி ஆர். திருச்சிற்றம்பலமும், திருமதி திலகம் குமாரசுவாமியும் தெரிவு செய்யப்பட்டார்கள். (சு)


## VACANCY

Wanted a Clerk. who is cappable of handling hire purchase documentation independently Previous Experience an advantage Apply with all details on or before the 15th April 1982. Giving two referees.

The post applied should be clearly indicated on the left hand corner of the envelope.

Apply:-

Sales Manager,

The Finance Co., Ltd

249, Power House Road,
Jaffna.



மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
மக்கினென்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன்
மற்றும் ∴ மத்திய கிழக்கு ∴ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
∴ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான
எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில்
பிரயாணக் காசோலைகள்
(TRAVELLERS CHEQUES)
நாடுங்கள்
மக்கினென்ஸ் ட்றவல்
சேவிஸ்(சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த: பெ. எண். 92, தொலைபேசி:8154


## இன்று

[யாழ்ப்பாணம்]

ந. ப. நோ. கூட்டுறவு சங்கத்தின் மரக்காலை திறப்பு விழா இன்று மாலை நடைபெறவுள்ளது. இவ் வைபவத்திற்கு நல்லூர் எம். பி. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

## முதலாம் எதிரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பிரமணியம், சி. சிவராசா, சி. சங்கரப்பிள்ளைஎன்பவர்கள் மிருசுவில் அழ்வாப்பிள்ளை அல்லது கிளியன் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்காரர் சார்பில் பொலிஸ் சார் ஜன் வி. செல்லையாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி வி. செல்லத்தம்பியும், 1ம், 2ம், 3ம்எதிரிகளுக்கு சட்டத்தரணி திருமதி நிமாலினி அம்பிகைபாகன் அனுசரணையுடன் சட்டத்தரணி எஸ். தம்பிரத்தினமும், 4ம், 5ம் எதிரிகளுக்கு சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜராகினர்.

பாலசிங்கம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: மீண்டும் காலிலும் முதுகிலும் குத்தினுர்கள். அப்போது ஜெயம் என்பவர் இனி விடுங்கள், குத்தியது காணும் என்றுர். அவர்கள் விட்டார்கள். நான்உடனேராசக்கோன் என்பவரது வீட்டில் போயிருந்தேன். அப்போது 2ம், 4ம் எதிரிகள் வந்து என்னை வெளியில் விடும்படி கேட்டார்கள். நான் வீட்டின் அறையிலிருந்தேன். அப்போதுவீட்டின்பின் பக்கத்திலிருந்து வாருன் விடவேண்டாம் என்ருெரு சத்தம் கேட்டது.

நான் அறையன்னலால் எட்டிப்பார்த்தபோது 1ம், 2ம், 3ம், 4ம் எதிரிகள் ஆழ்வாப்பிள்ளை அல்லது கிளியன் என்பவரை கொட்டனுல் அடித்துக் கொண்டிருந்தார்கள். காலமானவர் எனது சகோதரன். அவர் அப்போது மயங்கி விட்டார். அவர் இறந்த இடத்திற்கு போய்ப் பார்க்க முடியவில்லை. என்னைப் பிறகு மைத்துனர் செல்லத்துரை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுர். நான் நடந்ததை மைத்துனர் செல்லத்துரைக்குக் கூறினேன். என்னை பின் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்றுர்கள் அங்கு 12 நாட்கள் சிகிச்சை பெற்றேன். (சு)

## பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

உழைக்கும் பத்திரிகையாளர் சங்க தலைவர் திரு. இ. சிவகுருநாதனுக்கு யாழ். நகர மண்டபத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் இன்று பிற்பகல் பாராட்டு விழா நடைபெறும். (சு)

## போக்லண்ட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் மோதிக்கொள்வதை தவிர்ப்பதற்கான முயற்சிகளை எடுத்துவருகிறுர். கடந்த வியாழக்கிழமை அவர் பிரிட்டன் பிரதமர் திருமதி தட்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினுர்.

போக்லண்ட் தீவிலுள்ள மக்களில் ஒரு பகுதியினர் யுத்தத்திற்கு முன்னர் தங்களை அப்பகுதியிலிருந்து வெளியேற்றிவிடுமாறு ரகசிய கடிதம் ஒன்றை லண்டனுக்கு அனுப்பியுள்ளனர், இக்கடிதம் இன்று லண்டன் பத்திரிகைகளில் வெளியாகின.

500 போக்லண்ட் பிரஜைகள் சார்பில் எழுதப்பட்ட இக்கடிதத்தில், தாங்கள் தொடர்ந்து பிரிட்டிஷ் பிரஜைகளாகவே இருக்க விரும்புவதாகதெரிவித்துள்ளனர். (சு)

## செல்வா நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் நினைவு விழா இன்று மாலை திருநெல்வேலியிலுள்ள நல்லூர்த் தொகுதிக்கிளை காரியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

நல்லூர்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் உரையாற்றவிருக்கின்றனர். (கி)

## கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

'பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் மன்றத்தினர் பேராதனை அருள்மிகுகுறிஞ்சிக்குமரன் ஆலய நிதிக்காக கலை நிகழ்ச்சி ஒன்றினை இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வழங்குகின்றனர்.

இக் கலைநிகழ்ச்சியில் யாழ். வளாக நுண்கலைப்பீட விரிவுரையாளர்கள், மாணவர்களது இன்னிசைவிருந்து, வாத்திய விருந்து ஆகியனவும், கலைஞர் வேல் ஆனந்தன்குழுவினரின் 'தேரோட்டி மகன்' என்ற நாட்டிய நாடகமும் இடம்பெறவிருக்கின்றன. (கி)


## மரண அறிவித்தல்

### வீ. கணேசசங்கரி

கணேசசங்கரி காலமானுர். இவர் காலம் சென்ற வீரசிங்கம் (ஆசிரியர்), திருமதி இரத்தினம் வீரசிங்கம் ஆகியோரின் புதல்வரும், மங்களேஸ்வரியின் கணவரும், யோகசங்கரி, குணசங்கரி ஆகியோரின் தந்தையும் தருமசங்கரி, இராசசங்கரி, ஆனந்தசங்கரி (எம்.பி. கிளிநொச்சி), சகாதேவசங்கரி, பரதசங்கரி, ஞானசங்கரி, துருவசங்கரி, காலம் சென்ற மங்கையர்க்கரசி ஜெயசீலன். திருமதிகள், மதியாபரணம்- ஞானசம்பந்தன், லோகநாயகி இரத்தினம், திருநெல்நாயகி, கதிர்காமசோதி ஆகியோரின் சகோதரருமாவார் அன்னுரின் ஈமைக்கிரிகைகள் தோப்பு அச்சுவேலியில் திங்கள் [12—4—82] காலை பத்துமணிக்கு நடைபெறும். [2831]

## மரண அறிவித்தல்

தில்லைநாதர்
கமலநாதன்
(இராசன்)



சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த தில்லைநாதர் கமலநாதன்(இராசன்)வியாழக்கிழமைசிங்கப்பூரில்காலமானுர். இவர் ஆசிரியர்கள் தில்லைநாதர், முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சிவநாதன் (ரஞ்சன்) அனுசா, உசா, ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர்அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும். ஈமைக் கிரியைகள் இன்று 11—4—82 மாலை 5 மணிக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும். (2837)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. [illegible] Regd. Q. B. 10033/81. P. O. Box 41, Jaffna. தொலைபேசி 77 07, 339, 8156.